செ.வெ.எண்:39 நாள்:14.09.2021

## பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய செய்தி வெளியீடு எண். 09/2021, நாள்–13.09.2021ன்படி நாமக்கல் மாவட்டத்தில் காலியாக உள்ள 25 இடங்களுக்கு 09.10.2021 அன்று தறசெயல் தேர்தல்கள் நடைபெற உள்ளது. இதனால் நாமக்கல் மாவட்டம் வெண்ணந்துார் வட்டாரத்தில் மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தல் நடைபெற உள்ளதால் வெண்ணந்தார் வட்டாரம் முழுவதும், எருமப்பட்டி வட்டாரத்தில் ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் / கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தல் நடைபெற இருப்பதால் எருமப்பட்டி வட்டாரம் முழுவதும் மாதிரி நன்னடத்தை விதிகள் அமலுக்கு வருகிறது. மேலும் கிராம ஊராட்சி தலைவர் / கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தல்கள் நடைபெற உள்ள கபிலர்மலை வட்டாரம் கோப்பனம்பாளையம், இருக்கூர் ஊராட்சிகள், பரமத்தி வட்டாரம் கூடச்சேரி, செருக்கலை, பில்லூார் ஊராட்சிகள், நாமக்கல் வட்டாரம் ஆவல்நாய்க்கனபட்டி ஊராட்சி, எலச்சிபாளையம் வட்டாரம் மண்டகப்பாளையம் ஊராட்சி, கொல்லிமலை வட்டாரம் தின்னணுர் நாடு ஊராட்சி, மல்லசமுத்திரம் வட்டாரம் பிள்ளாநத்தம் ஊராட்சி, மோகனூார் வட்டாரம் என்.புதுப்பட்டி ஊராட்சி, நாமகிரிப்பேட்டை வட்டாரம் கார்கூடலபட்டி, திம்மநாய்க்கன்பட்டி, பெரப்பன்சோலை, மங்களபுரம் ஊராட்சிகள், புதுச்சத்திரம் வட்டாரம் காரைக்குறிச்சிபுதுார், எஸ்.உடுப்பம், திருமலைப்பட்டி ஊராட்சிகள், திருச்செங்கோடு வட்டாரம் ஆண்டிபாளையம் ஊராட்சி, சேந்தமங்கலம் வட்டாரம் நடுக்கோம்பை, பொட்டணம், உத்திரகிடிகாவல் ஆகிய ஊராட்சிகளில் ஊராட்சி முழுவதும் மாதிரி நன்னடத்ததை விதிகள் அமலுக்கு வருகிறது.

எனவே மேற்கண்ட நன்னடத்தை விதிகள் அமலில் உள்ள பகுதிகளில் குறிப்பாக பின்வரும் விதிகளை கடைபிடிக்கப்பட வேண்டும்.

- ❖ தேர்தல் நடைபெறும் எப்பகுதியிலும் நலத்திட்டங்கள் மற்றும் பணிகளுக்காக புதியதாக நிதி விடுவிக்கப்படுவதும் பணி ஒப்பந்தங்கள் வழங்குவதும் கூடாது. ஆயினும் ஏற்கனவே நிறைவு செய்யப்பட்ட பகுதி பணிகளுக்காக வரையறுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைக் கடைபிடித்து நிதித் துறையின் ஒப்புதலுடன் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு தடை ஏதுமில்லை.

- ❖ ஏற்கனவே முடிவு பெறும் தருவாயில் உள்ள திட்டங்களை நிறுத்தவோ அல்லது தாமதப்படுத்தவோ தேவையில்லை.

- ❖ உரிய அனுமதிகளைப் பெற்று களத்தில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்ட திட்டப் பணிகளை தொடராலாம் அதற்கு தடை ஏதும் இல்லை.

- ❖ பதவியில் இருக்கும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் தங்கள் பதவியில் அதிகாரத்தை தேர்தல் பிரச்சாரத்திற்கு பயன்படுத்துகிறார்கள் என்ற புகாருக்கு இடம் அளிக்கப்படாததததை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

- ❖ தற்செயல் தேர்தல்களின் போது மாதிரி நடத்தை விதிகள் நடைமுறையில் உள்ள பகுதிகளில் உள்ளாட்சி பிரதிநிதிகள் தங்களது அலுவலக ஊர்திகளை பயன்படுத்த தடை செய்யப்பட்டுள்ளது.

- ❖ வறட்சி / வெள்ள நிவாரண நடவடிக்கைகள் அல்லது இது போன்ற மீட்பு நடவடிக்கைகள் குறித்து கலந்தாலோசிக்கும் கூட்டங்கள் தவிர ஊரக உள்ளாட்சி மன்றங்களின் கூட்டங்களை நடத்தக் கூடாது.

மேலும் வேட்பாளர்கள், கட்சி பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்து மாதிரி நன்னடத்தை விதி கையேடு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய இணைதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. எனவே வேட்பாளர்கள், கட்சி பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் அனைவரும் மேற்கண்ட மாதிரி நன்னடத்தை விதிகளை பின்பற்றுமாறு மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

**மாவட்ட தேர்தல் கட்டுப்பாட்டு அறை எண்: 04286 - 280855**

**மாவட்ட ஆட்சித் தலைவர்,**
**நாமக்கல்.**